சிவமயம்

Registered as a News-
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னெந்தையிணையடி நீழலே.

புத் ருசு] யாழ்ப்பாணம்:—தாரணஹ கார்த்திகைமீ உகஉ (1944 டிசம்பர்மீ 14 வியாழக்கிழமை) [இல கசுகூ

## ஹங்கேரியில் முக்கால்பாகம் பிடிபட்டது

### புடாப்பெஸ்ட்மீது ரஷ்யரின் தாக்குதல்

### நகருக்குத் தெற்கில் டன்யூபைக் கடந்தனர்

ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்ட்மீது பிரமாண்டமான சோவியத் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது என ஜெர்மன் நியூஸ் ஏஜன்ஸி கூறியுள்ளதாம்,

அச்செய்தி மேலும் கூறுவதாவது:—

"இப்பெரிய புதுத்தாக்குதலின் மூலம், புடாப்பெஸ்டுக்கு 30 மைல் வடக்கிலுள்ள ஸெப்மல், ஹட்வான் ஆகிய டான்யூப் நதித் தீவுகளை வளைக்க முயற்சி நடைபெறுகிறது. ஹங்கேரிய முனையின் இதர பாகங்களிலும், முக்கியமாக மிஸ்காலிலில், இதே சமயத்தில் தாக்குப்பிடித்து நிற்பதற்கான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

டான்யூபின் இரு கரங்களுக்கும் இடையில் இருக்கும் ஸெபெல், ஒரு குறுகிய நீளமான தீவு. இது புடாபெஸ்டுக்குத் தெற்காகத் தள்ள சுற்றுப்புறங்கள் வரையில் வியாபித்திருக்கிறது.

வடகிழக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் புடாப்பெஸ்டை வளைத்துக்கொண்டு ரஷ்யர் முயற்சிசெய்வதாக பேர்லின் அறிவித்துள்ளது.

ரஷ்ய விசயத்தின் தெற்குப்பிரிவுப்படை புடாப்பெஸ்டுக்குத் தெற்கில் டான்யூப் நதியைக் கடந்துவிட்டதாகவும் டான்யூப் மேற்குக்கரையிலுள்ள எர்க்ஸியை அது பிடித்துவிட்டதாகவும் கூறுகிறது.

ஆனால் இப் புதுத்தாக்குதலைப் பற்றி இதுவரை மொஸ்கோவிலிருந்து எவ்விதமான அறிவிப்பும் கிடையாது.

#### ஹங்கேரியில் முக்கால்வாசம் ரஷ்யர் வசம்

ஜெனரல் பீட்ரோவ், மார்ஷல் மாலினொவ்ஸ்கி, மார்ஷல் டோல்புகின் ஆகியோரின் 3 படைகளும் வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய திசைகளிலிருந்து புடாப்பெஸ்டை நோக்கி ஒருமுகமாகத் தாக்கிக் கொண்டு செல்கின்றன. ஆஸ்திரிய எல்லைக்கு முன்பாக முதலாவது இறுதிப்போரை நடத்துவதற்கு முன் ஜேர்மனர் ஹங்கேரியை முழுவதும் ஒழித்து விடுவதில் முனைந்திருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட ஹங்கேரியில் முக்கால்பாகம் ரஷ்யர் கையில் இருக்கிறது. இப்போது ஆஸ்திரியாவுக்குச் செல்லுவதற்கான கடைசி வாயில்களில் உக்கிரமான போர் ஆரம்பமாயிருக்கிறது. இந்தப் போருக்காக இருதரப்பினரும் பெருவாரியான படைகளைக் கொண்டு வருகின்றனர். எல்லைக்குக் கிழக்கில் நடக்கவிருக்கும் ½ முக்கியமான இறுதிப்போராட்டங்களில், புடாபெஸ்ட் போருடன் இதுவும் ஒன்றாக விளங்கும்.

ஆஸ்திரியாவுக்கு 2 நாள் பிரயாண தூரத்தில் செஞ்சேனை நெருங்கிவிட்டது. ஆகையால் ஜெர்மனியின் உள்நாட்டு எல்லைகளுக்கு முன் சோவியத் முப்படைகளை வைத்திருக்கும்பொருட்டு, ரஷ்யர்கள் முன்னிலும் அதிகப்படியான டாங்கிகளையும் குதிரைப்படைகளையும் கொண்டு வருகின்றனர். பலட்டான் ஏரிக்கரையில் பிடித்த சில இடங்களிலிருந்து ரஷ்யர் பரவலாக முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். பலட்டான்-பால்கார் என்ற பெரிய துறைமுகப் பட்டினம் பிடிபட்டது. டான்யூப் நதியிலிருந்து பிலாகசில ரஷ்யப்படை இறங்கி அங்கிருந்த ஜெர்மன்படையை நிர்மூலமாக்கிவிட்டது.

மார்ஷல் டிட்டோ காரியாலய அறிக்கை கூறுவதாவது:—

யூகோஸ்லாவியாஸ்த்தரிய பிரதேசத்தில் போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. யூகோ-அல்பேனிய எல்லையில் உள்ள ஸ்குட்டாரியை அல்பேனிய சுதந்திரப்படைகள் விடுவித்தன.

ஸாக்ரெபிலிருந்து டால்மேஷியன் கடற்கரைவரையிலுள்ள ரயில்பாதைதான் இப்பிரதேசத்திலுள்ள ஜெர்மனியர் தப்பிஓடுவதற்கு வசதியாகவிருந்தது.

கிழக்கு பாஸ்னியாவில் யூகோ சுதந்திரப்படைகள் ஜெர்மனியரை மும்முரமாகத் தாக்கிக்கொண்டிருக்கின்றன.

## மின்சார நிலையத்தில் சதிநடக்குமென பட்டினசபைத் தலைவரின் பீதி

### பொலிஸார் விசாரணை நடத்தினர்

யாழ்ப்பாணம் மின்சார நிலையத்திலிருக்கும் மின்சார யந்திரங்களுக்கும், அவ்விடமிருந்து மின்சார சக்தியை விநியோகம் செய்வதிலும் சதிச்செயல்கள் நிகழக்கூடுமென்று தாம் பயப்படுவதாக யாழ்ப்பாணப் பட்டினசபைத் தலைவர் திரு. சி. பொன்னம்பலம் பொலிசுக்கு ஒரு புகார் கொடுத்திருந்தார். இதன் பேரில் உதவிப் பொலிஸ் சூப்பிரண்ட் திரு. பி. ஆர். டி. எஸ். செனவிரத்ன, பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஹிராட்டனும், சப் இன்ஸ்பெக்டர் திரு. ரொட்ரிக்கோவுடனும் யாழ்ப்பாணம் மின்சார சுப்பிரின்டென்ட் காரியாலயத்திற்கு சனிக்கிழமைசென்று அங்கு விசாரணை நடத்தினார். மின்சார நிலையத்தின் சுப்பிரின்டென்ட் திரு நாகேந்திரன் அவ்வமயம் கூறியதாவது:—

யாழ்ப்பாணம் பட்டின சபை மின்சாரப்பகுதித் தொழிலாளர்சங்கத்தின் அங்கத்தினர்கள் சதிச்செயல்களைச் செய்யாமலிருப்பதற்காக என்னால் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்வேனென்று பொலிசாருக்கு நான் உறுதிகூறுகிறேன். மேற்படி தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தினர்கள் சதிச்செயல்களில் சிக்கவைக்கவேண்டுமென்று மேற்படி சங்கத்தில் அங்கத்தினர்களாக இல்லாதவர்களால் முயற்சி செய்யப்படலாம்.

பட்டினசபையின் தலைவர் கைபிடிப்புள்ள சமானங்களின் விபரமடங்கியதும், மின்சார ஆலைகாலைறத்து சாதாரணமான ஒரு நிலைமையிலிருந்து இரண்டு பக்கங்கள் கழிக்கப்பட்டிருக்கின்றன. ....வன்றும் பொலிசுக்கு வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

[illegible] எஞ்ஜினுக்கு மீண்டும் பழுது ஏற்பட்டுவிட்டதால் நேற்றிரவு பல மணிநேரம் மின்சாரஇயக்கம் இல்லாமற் போயிற்று. ஆனால் பழுதேற்பட்டவுடனே ஸ்தலஸ்தாபன கமிஷனர் திரு. இ. டப்ளியு கன்னங்கராவும் பொலிஸ் சுப்பிரண்டு மிஸ்டர் சில்வாவும் மின்சார நிலையத்திற்கு வந்திருந்தனர். மின்சார நிலையங்களின் எஞ்ஜினியர் திரு. எல். நெகல் என்ஜினை பரிசோதித்துப் பார்த்தவுடன், அந்தஎன்ஜின் மீண்டும் வேலைசெய்வதற்கான திருத்தங்களும்செய்தார். ஆனாலசற்றுநேரத்திற்கும் பிறகு என்ஜின்மறுபடியும்வேலைசெய்யாமல் நின்றுவிட்டது. பட்டின சபையின்தலைவர் இன்றுகாலை 2 மணிவரை மின்சார சக்தி கொடுப்பதில் தடையேற்படுவதைக் குறித்து ஒரு விசாரணை நடத்தினார்.

#### பட்டின சபையின் விசேஷக் கூட்டம்

ஞாயிற்றுக்கிழமைகாலை 10 மணி முதல் 12-30 மணி முடிய பட்டின சபையின் விசேஷக்கூட்டமொன்று நகரமண்டபத்தில் நடைபெற்றது. இந்த கூட்ட நடவடிக்கைகளில் திரு. கன்னங்கராவும், எஞ்ஜினீயர்களான மிஸ்டர் நேகலும், மிஸ்டர் பேர்ஹாம் டோவும் கலந்துகொண்டனர். இக்கூட்ட முடிவில் திரு. ராமசுப்பாபதி மின்சார சூப்பிரின்டென்டுக்கு ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்றும், அதற்குரிய அதிகாரத்தை சபைத்தலைவருக்குக் கொடுக்கவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இத்தீர்மானத்தை திரு. சீ. வ. சின்னத்துரை ஆமோதித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டம் முடிந்ததும் மின்சார சூப்பிரின்டென்ட் வேலையிலிருந்து

### மனைவியும் மாமியும் கொலை

#### கணவனுக்குத் தண்டனை

சேலம் டிச 10—

தருமபுரியிலுள்ள எட்டியம்பட்டிக் கிராமத்தில் இரட்டைக் கொலை வழக்கில் தீர்ப்புக் கூறுகையில் சேலம் ஜில்லா நீதிபதி திரு. பி. ராமலிங்கம் எதிரியான பெரியண்ணக் கவுண்டருக்கு ஆயுள் பரியந்தம் மறியற்றண்டனை விதித்தார்.

எதிரி தன் மனைவியின் நடத்தையைச் சந்தேகித்து அவளைக் கோடரியால் தாக்கிக் கொலைசெய்ததாகவும், அதைத் தடுக்கவந்த மனைவியின் சிறியதாயார் முத்தம்மாளையும் கொன்றுவிட்டதாகவும், பின்னர் எதிரி கோடரியுடன் பொலிசாரிடம் சரணடைந்ததாகவும் கூறப்பட்டது. இறந்தவள் தனக்கு ஆத்திரமூட்டியதால் தாக்கியதாகவும் தனக்குக் கொலைசெய்யும் நோக்கம் இல்லையென்றும் எதிரி கூறினான்.

நீதிபதி எதிர் முன்கோபமுள்ளவனாதலால் கொலைசெய்யவில்லையென்ற காரணத்திற்காக ஆயுள் பரியந்தம் மறியற்றண்டனை விதித்தார்.

### குடிகாரனுக்கு வந்தவெறி 12 பேர் உயிரைப் பறித்தது

பாணந்துறைக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு குடிகாரன் வெறியில் 4 ஆண்களையும் 8 பெண்களையும் குத்திக் கொலைசெய்துவிட்டானாம்.

அக்குடிகாரன் தனது எஜமான் வீட்டிற்குள் நுழைந்து, தன் வழியிலிருந்தவர்களால், ஆண் பெண் உட்பட உள்ளிருந்த எல்லோரையும் தாக்கிவிட்டு ஓட ஆரம்பித்தானாம். பொலிசார் அவனைக் கைதுசெய்ய முன்னர் பலரைத் தாக்கியுள்ளானாம்.

---

திரு. நாகேந்திரன் லீவு பெற்றுச் செல்வதாகவும் தன்னுடைய உத்தியோகப்பொறுப்புகளை திரு. நேகலிடம் தற்காலிகமாக ஒப்படைப்பதாகவும் பட்டினசபைத்தலைவரைக் கேட்டுக்கொண்டார். பட்டினசபைத் தலைவருக்கும், திரு. கன்னங்கராவுக்கும் முன்னிலையில் திரு நாகேந்திரன் தமதுடைய உத்தியோகப்பொறுப்பை திரு. நேகலுக்கு தற்காலிகமாக ஒப்படைத்தார்.

யாழ்ப்பாண பட்டின மின்சார ஊழியர்களடங்கிய கூட்டத்தில் திரு. கன்னங்கரா பேசினார். அப்போது அவர் ஊழியர்கள் வசுவாசத்துடன் நடந்துகொள்ளவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினார். பட்டினசபைத் தலைவரின் அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தர் எவராயினும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும் அவர் புத்திமதி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரண௵
கார்த்திகை உகூஉ வியாழக்கிழமை

## ஒருபடியரிசி

வருகிற 1945-ம் ஆண்டு ஜனவரி மீ முதற்றேதி தொடக்கம் ஒரு கூப்பனுக்கு பறைவெட்டி (அதாவது முக்காற்சேர்) சனங்களுக்கு உதவப்படுமென்னுஞ் சந்தோஷ சமாசாரத்தைச் சென்ற திங்கட்கிழமைப் பிரசுரத்தில் வெளியிட்டோம். இந்த இலங்கை மக்களுக்குச் சில வருடங்களாயுண்டுபட்டுள்ள தீராப் பசியை ஒரு அளவிற்குத் தீர்க்கும் இவ்விஷயத்தில் ஈடுபட்டு உழைத்த புண்ணியவான் உணவுப் பொருட் கட்டுப்பாட்டுப் பகுதித் தலைவராகிய ஸேர். ஒலிவர் குணத்திலக்காவாவர். இவர் இங்கிலாந்திற்குச் சில வாரங்கட்கு முன்னர்ச் சென்றிருந்தபோது அங்குள்ள குடியேற்றநாட்டு மந்திரி முதலாம் பெரிய அதிகாரிகளுடன் பேசி இந்த ஒழுங்கினைச் செய்தனர். ஆனதினால் குறித்த ஸேர். குணத்திலக்காவுக்கும் அவர் கேள்விக்கு இசைந்த சீர்மையிலுள்ள மேலதிகாரிகளுக்கும் இந்நாட்டு மக்கள் ஒருஅளவிலுங் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சென்ற இரண்டுவருட காலமாக வாரமொன்றிற்கு இப் பறைவெட்டி அரைப்படியரிசி வாங்கியுண்ட சனங்களுக்கு இப்போதைக்கு இது ஒரு பெரிய ஆறுதலாகவிருக்குமெனலாம். எக்காலத்திலும் நெல்லரிசியையே பிரதான உணவுப் பொருளாகக் கொண்டு காலங்கழித்த இந்நாட்டு மக்கள் இப்பொழுது கோதுமையரிசி, கோதுமை மா, மாவள்ளிக்கிழங்கு, குரக்கன், சாமை, தினை முதலிய வேறு உணவுப்பொருள்களை நித்திய உணவாக உட்கொண்டு சீவிக்கப் பயின்றுவருகின்றார்கள்.

இந்த ஒருபடியரிசி ஏற்பாடு அடுத்த ஆண்டின் முதலாம் மாசத்திலிருந்தே அப்பொழுது செயலிலிட்டாலும் பின்னரும் இந்த அரிசி விகிதம் குறைதலின்றி உதவப்படத்தக்க ஏதுக்களுண்டென மேலதிகாரிகள் நம்பிக்கையோடு தெரிவிக்கின்றனர். அரைப்படியரிசியுடன் இலங்கை மக்கள் இதுகாலும் காலங்கழித்து வந்தனரேனும் இராணுவப் பகுதியிலும் இராணுவப் பகுதியோடு தொடர்புடையவர்களாகக் கடமையாற்றும் ஒரு பகுதியினர்களையும் ஏழை [illegible] மக்களுடைய பிரச்சனைகளையும் தேவைகளையும், அவர்களையும் எங்கள் மேலதிகாரிகளையும் அறியாமல் [illegible] தலைப்பட்டனர். ஆனால் [illegible] யுத்தம் ஒரு முடிவிற்கு வருமளவில் அதிகாரிகள் இங்குள்ள மக்களுடைய "வயிற்றுப்பாட்டைப்" பார்த்துக்கொள்ளுவர். இந்நாட்டு மக்களுக்குக் கூடிய விரைவில் அரிசியுதவியும் [illegible] இங்குள்ள [illegible] நித்திய [illegible] ஒரு [illegible] நடைமுறைப்படுத்த அதிகாரிகள் [illegible] செய்வரென எண்ணுகின்றோம்.

இனி, இந்த வருஷமாக இப்பொழுது கவலைப்படவிருப்பவர்கள் அரிசி மொத்தல், "கொந்த வீட்டிற் பிடுங்கிய [illegible]" என்ற முறையில் அநியாயமாக விற்ற சோரவியாபாரிமாரும் "சமக்காரருமாவர்; இவர்கள் செய்த அக்கிரமத்துக்கு உவமையில்லையெனலாம். இங்குள்ள ஏழை மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், எத்தனை நாளுக்குப் பட்டினி கிடந்தாலும் இந்த நாட்டு [illegible] அநியாய விலை கொடுத்து வாங்க நினையாது வறுமையிற் செம்மையாகச் சீவியஞ்செய்யப் பழகிக்கொள்வது நன்றாம். இதனால் சோரவியாபாரமும் நன்றாய் விழுமென நினைக்கிறோம்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—30)

### "சீவபரியந்தம் உங்களை மறவேன்"

இனிமேலும் நான் இந்த இடத்திலிருக்கலாகாது. இருந்தால் மானங்கெடவேண்டி நேரும்; எங்கே போவது, எப்படிப் போவது என்ற இவைகளைப் பற்றியே அன்றிரவு முழுவதுஞ் சிந்தித்துக்கொண்டு கிடந்தேன்; என் பிரிவால் அஞ்சுகத்தம்மாள் கவலைப்படுவாளேயென்பதையுஞ் சிந்தித்தேன்; அவளை விட்டுப் பிரிவது எனக்கும் மனவருத்தந்தான்; ஆனாலும் என்ன செய்யலாம், என்னுடைய நெறியைப் பாதுகாத்துக்கொண்டு நானும் அஞ்சுகத்தக்காளும் உயிரோடிருந்தால் எந்தவேளையிலும் ஒருவரையொருவர் சந்திக்கலாந்தானேயென்று மனந்தேறினேன். விடிந்தவுடனே காலைக்கடன்களை முடித்துப் போசனமுஞ் செய்தபின் அக்காளுக்கு என் நோக்கத்தை வெளியிட்டேன்; அவள் பெரிதுங் கவலைப்பட்டாள்; தன் கண் கலங்கப்பெற்றாள்; கவலையோடு என்னைப் பார்த்து "அருமைத் தங்காய், நீர் இந்த இடத்தைவிட்டுப் போவீரென்பதை நான் இராத்திரியே நிச்சயம் பண்ணிவிட்டேன்; உயிரோடிருந்தால், உண்மையான அன்பிருந்தால், ஒருவரையொருவர் எப்படியோ சந்திக்கலாம், தங்காய்; ஆனால், ஒரு துணையின்றி நீர் தனியே போய் என்ன செய்யப் போகின்றீரென்பதையிட்டு எண்ண எண்ண என் மனம் வேதனைப்படுகின்றது" என்று சொல்லிக் கண்ணீர் விட்டாள் என் அக்காள். "அக்கா, துணையில்லையென்றெண்ணி நீர் இரங்க வேண்டாம்; அந்த ஈசுவரி, சகல உலகங்களுக்கும் மாதா, அவள்தான் துணை, அவள் என் மானத்தைக் காப்பாளென்ற திடசித்தங்கொண்டே, இந்த இடத்தைவிட்டுப் புறப்படப் போகின்றேன்; அக்கா, இந்த ஒன்றையும் யோசித்துப் பாருங்கள்; நேற்று அந்தக் கொடியவன் என்னைப் பலாத்காரஞ் செய்யும் நோக்கமாகத் துரத்தி வந்தபோது, நான் ஓலமிட்டுக்கொண்டு ஓட, அந்த நேரத்தில் உங்களைக் கொண்டுவந்து என்னெதிரில் விட்டது அந்த மனோன்மணியின் திருவருளல்லவா? உலகத்திலுள்ள உயிர்கள் பொருட்டு முப்பத்திரண்டு அறங்களைச் செய்யும் காமாட்சி என்னை மாத்திரங் கைவிடுவாளா? ஒருபோதும் விடமாட்டாள்; எல்லாம் அவளருளாலே நடைபெறுமென்று சொல்லித் தேற்றினேன்; அக்காளும் ஒருவாறு தேறினாள். "தங்காய், எங்கே போகப்போகின்றீர்? எந்நேரம் புறப்படவிருக்கிறீர்? பகலில் நீர் புறப்படுவது புத்தியல்ல, இரவிலே நடுச் சாமத்திற்குமேல் ஒரு புகைரதம் இந்தப் பட்டினத்திலிருந்து "எக்ஸ்பிறஸ்", அநேகமாக எல்லாத் தானங்களிலும் தங்காமல் பிரதானமான சில தானங்களில் மாத்திரம் தங்கித் தங்கிப் போகும்; அதிலேதான் புறப்பட்டு நீர் போகவேண்டும்; நானும் உம்முடனே வந்து உம்மைப் பயணமனுப்பினாலன்றி என் மனம் சகியாது; நீர் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; ஆகவேண்டிய ஆயத்தங்களையெல்லாம் நான் செய்கிறேன்" என்று அழுதழுது என்னுள்ளுருகச் சொன்னாள் என் அக்காள், அவளுடைய [illegible] வார்த்தைகளைக் [illegible] மனமும் நெருப்பிடைப்பட்ட மெழுகுபோல உருகியது; அக்கா, நீங்கள் கலங்கவேண்டாம்; பெற்ற தாயும் இப்படி உங்களைப்போற் செய்யமாட்டாள்; நான் உங்களை என் சீவபரியந்தம் மறக்கமாட்டேன்; மறந்தாற் பொல்லாத துரோகியாவேன்; நீங்கள் அழாதீர்கள் என்று சொல்லி என் முன்றானையால் அவளுடைய கண்ணீரை யொற்றினேன். அஞ்சுகத்தம்மாள் ஒருவாறு தன்மனசைத் தேற்றிக்கொண்டு என்னுடனிருந்து மத்தியானப் போசனத்தையும் முடித்துக்கொண்டு தன்னிடத்திலுள்ள பிரயாணப் பெட்டிகளுள் ஒன்றையெடுத்து எனக்காகிய சேலைகள், என் ஆபரணங்கள், இன்னும் பிரயாணத்திற்கு ஆகவேண்டிய பொருள்கள் எவைகளோ அவைகளையெல்லாம் அந்தப் பெட்டியினுள்ளே நன்றாக வைத்தாள்.

### அரிதிற் பிரிதல்

அதன்பின்னர் என்னைப் பார்த்து, "தங்காய், நீர் இரவு புறப்படுதற்கு நிச்சயித்துக் கொண்டீர்; இங்கே வந்து பலமாசஞ் சென்றும் இந்தப் பட்டினத்தை இன்னமும் நீர் ஒரு நாளாயினுஞ் சுற்றிப் பார்த்ததில்லை; இப்பொழுது மோட்டார் ரதம் இங்கே வரும், இருவரும் அதில் ஏறிக்கொண்டு இப்பட்டினத்தைச் சுற்றிப் பார்த்து வருதற்கு உமக்குச் சம்மதமா" என்று அவளுடன் கேட்க, ஆம், அக்கா, உங்களுக்கு எது பிரியமோ அது எனக்கும் பிரியந்தானே; நீங்கள் என்னைக் கேட்கவேண்டியதில்லையேயென்றேன்; அரைமணி நேரஞ்செல்ல ஒரு ரதம் அங்கே வந்து நின்றது; உடனே அஞ்சுகத்தம்மாள் தன்னையும் என்னையும் அலங்கரித்துக்கொண்டு, ஒரு கைப்பையையும் எடுத்துக்கொண்டு என்னுடன் இரதத்தில் ஏறினாள்; பிரதானமான சில இடங்களையும் கட்டடங்களையும் பார்த்தபின் கடைத்தெருவழியாகப் போனோம்; அங்கே ஒரு பெரிய புடைவைக் கடையில் அஞ்சுகத்தம்மாள் என்னுடன் பிரவேசித்துச் சில சேலைகளும் சட்டைக்குரிய துணிகளும் வாங்கினாள்; வெண்பட்டுச் சேலையும் வாங்கினாள்; அதன்பின் ஒரு 'க்ஷேமநிதி வங்கிப்'பிற் சென்று அங்குள்ள உத்தியோகத்தரிடம் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்து, ஏதோ அவருடன் தனியே பேசிவிட்டு ஒரு பத்திரத்தைக் கொண்டுவந்து என்னிடம் தந்து என் கையெழுத்தையும் அந்தப் பத்திரத்தில் இடச் சொல்ல நான் அப்படியே இட்டேன்; அந்தக் கருமத்தை முடித்துக்கொண்டு அங்குள்ள பிராமணர் நடத்தும் ஆகாரக் கடையொன்றிற் சென்று அன்றிரவு எட்டு மணிக்கு நாங்கள் இருக்கும் வாசஸ்தானத்திற்குச் சிற்றுண்டி வகை அனுப்பி வைக்க வேண்டுமென்று தெரிவிக்க, அவர்கள் அப்படியே செய்யலாமென்று சொன்னார்கள்; அதன் பின்னர் அந்தப் பட்டினத்திலுள்ள சிறந்த பூஞ்சோலையிற் சென்று சிறிது நேரம் பொழுது போக்கிவிட்டு பிற்பகல் ஐந்தரை மணியளவில் எங்கள் வீடு வந்து சேர்ந்தோம். இரதத்தை விட்டு இறங்கும்போது சாரதியிடம் அக்காள் ஏதோ குறிப்பாகச் சொல்லிவிட்டாள். அவன் இரதத்தைக் கொண்டு போய்விட்டான். நாங்கள் இருவரும் மாலையில் செய்யவேண்டிய [illegible] முடித்தபின் [illegible] பிராமணர் இருவருக்கும் சிற்றுண்டி தேநீர் கொண்டுவந்து உதவ நாங்கள் அவைகளை ஏற்று உண்டபின் அந்தச் சமயம் பாகியிடம் அஞ்சுகத்தக்காள் ஏதோ சொல்லிவிட்டாள். சற்று நேரஞ் செல்ல அஞ்சுகத்தக்காளிடம் சங்கீதமும் நாட்டியமும் பயிலும் "பத்மா" என்ற பெண்பிள்ளை அங்கே வந்தாள்; அந்தப் பிள்ளையுடன் நான் முந்தியே பழகிக்கொண்டேன்; "பத்மா, நீ இரவுக்கு வீட்டிற்குப் போகவேண்டாம்; இங்கேயே தங்கலாகும்; நீ வீட்டிற்கு இன்றிரவு வரமாட்டாயென்பதை நான் உங்கள் தாயாருக்குச் சொல்லியனுப்புகிறேன்" என்று அக்காள் அந்தப் பிள்ளைக்குச் சொல்ல அவளும் அதற்குடன்பட்டு அன்றிரவு எங்களுடன் தங்கினாள். இராப் போசனத்தையும் முடித்துக்கொண்டோம்; "பத்மா நீ சற்று உறங்க வேண்டுமானால், இந்த அக்காளுடைய அறையுட் போய்ப் படுத்து உறங்கலாம்" என்று அக்காள் சொல்லுதலும் பத்மா அப்படியே போய்ப் படுத்துச் சற்று நேரஞ் செல்ல உறங்கினாள். "தங்காய், இந்தப் பெட்டிதான் நீர் பயணம் பண்ணும்போது கொண்டுபோகவேண்டிய பெட்டி; உமக்கு ஆகவேண்டிய பொருள்களெல்லாம் இதற்குள் வைக்கிறேன்" என்று சொல்லுதலும், நான் மனமுருகி "அக்கா, ஆண்டி பரதேசியாகப் புறப்படுமெனக்கு இந்தப் பொருட்கள் பண்டங்களெல்லாம் ஏன்! இப்படியான ஆயத்தங்கள் ஏன்? இரண்டு காவிச்சேலையும் ஒரு உருத்திராக்க மாலையும் போதும்; மற்றவைகளெல்லாம் உங்களுடன் இருக்கட்டும்; இப்படிச் சொல்லுகிறேனென்று மனவருத்தப்படாதீர்கள் என் அன்பான அக்கா" என்று கண்ணீர் ததும்பச் சொன்னேன். என் பிள்ளைப்பேச்சைக் கவலைப்பட்டுக்கொண்டு [illegible] அஞ்சுகஞ் சிரித்து "அப்படியல்லம்மா, கைப்பொருளில்லாமல் யாத்திரை செய்யவொண்ணாது. யாத்திரை பண்ணவேண்டிய முறைகளை நான் சொல்லுகின்றேன் கேளும்" என்று எனக்குப் பல புத்திகளும் உபாயங்களுஞ் சொல்லித்தந்தாள்; அவைகளுட் சில: பிரதானமான எந்தத் தலத்திலேயாயினும் இரண்டு மூன்று தினங்கட்கு மேல் தங்கவொண்ணாதென்பதொன்று; யாத்திரை செய்யும்போதெல்லாம் வெண்பட்டுச் சேலையும் உருத்திராக்கமுந் தரித்துக்கொள்ள வேண்டுமென்பது மற்றொன்று; அக்காள் சொன்ன புத்திகளையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டேன்; பயணத்திற்காகிய சிற்றுண்டி முதலியனவெல்லாம் அங்கே வந்து சேர்ந்தன. ஆகவேண்டியவற்றையெல்லாஞ் சித்தஞ் செய்து வைத்துவிட்டு அக்காள் ஒரு பத்திரத்தைக் கடித உறையுள் வைத்தபடி என்னிடந் தந்து "தங்காய், இது எந்நேரமும் உன் வசம் இருக்கவேண்டும்; ஆபத்து வந்த காலத்திலும் இது உனக்குப் பயன்படும்" என்று சொல்லுதலும், அக்கா, இது என்ன என்று ஆச்சரியத்துடன் கேட்க, நாங்கள் இன்று பகல் போனதாகிய அந்த க்ஷேமநிதிச் சாலையில் (வங்கியில்) உம்முடைய பேரில் 500 ரூபா இட்டிருக்கிறேன்; நான் இப்பொழுது உமக்குத் தந்தது அதன் பற்றுச்சீட்டு; உமக்குத் தேவையான நேரத்தில் நீர் அந்தப் பணத்தை முழுவதையேனும் ஒருபாகத்தையேனும் எங்கே சென்றாலும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்..." என்று சொல்ல

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையும் விஞ்ஞானமும்

ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B. A. B. L

மயிலைத் தமிழ்ச்சங்கத்திற் செய்த பிரசங்கத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதியது

(முற்றொடர்)

உயிரளிக்குங் காற்றானது எங்கும் நிறைந்து கிடப்பதுபோல 'விஞ்ஞானமும்' நமது தினசரிவாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும் நிரம்பிக்கிடக்கிறது. ஆயினும், அதை நாம் உணருவதில்லை. அதிக அளவில் நன்மையேனும் தீமையேனும் அதனால் விளையும்போது மட்டிலும் அதைப்பற்றி நாம் நினைக்கிறோம். அதைப் புகழ்கிறோம்; அல்லது குறைகூறிப் பழிக்கிறோம்.

விஞ்ஞானயுகத்திலே நாகரிகவாழ்க்கை புரிந்துவரும் நாம் கோழி கூவக் கண்விழிப்பதில்லை; புள்ளினம் சிலம்பப் படுக்கைவிட்டெழுவதில்லை; எந்திரசக்தியால் ஓடும் கடிகாரம் நம்முடைய தலைமாட்டிலே மணியொன்று ஒலிப்படுத்த நாம் துயில் கலைந்து விழித்தெழுகிறோம்; எந்திர சக்தியால் இயற்றப்படும் மின்சார சக்தியால் பிரகாசிக்கும் மின்சாரவிளக்கை ஏற்றுகிறோம்; எந்திரசக்தியால் நமது வீட்டில் வந்துசேரும் குழாய்த் தண்ணீரில் உடல் கழுவிக் குளிக்கிறோம்; எந்திரசக்தியால் அச்சிடப்பட்ட பத்திரிகைகளையும் புத்தகங்களையும் படிக்கிறோம்; எந்திரசக்தியாற் செய்த பாத்திரம் பண்டங்களை வீட்டில் வழங்குகிறோம். காப்பிக் கொட்டையை வறுப்பது ஓர் எந்திரம், அதைத் திரிப்பது மற்றோர் எந்திரம். எந்திரசக்தியால் ஓடும் வண்டிகளில் ஏறித் தொழிலுக்குச் செல்கிறோம். மோட்டாரும், காரமோடும், தந்தியும் தபாலும் எந்திரசக்தியையே ஆதாரமாக உடையவை. எந்திரங்கள் யாவற்றையும் ஆக்கவும் இயக்கவும் அவற்றுக்கெல்லாம் மூலாதாரமாக உள்ளது விஞ்ஞானந்தானல்லவா?

இவை யாவும் சாமானியமானவையல்ல, விசேஷ நிகழ்ச்சிகள் என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆதலால் இவற்றை விட்டுவிட்டு மிகவும் சாதாரணமான ஒரு விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம், நம் நாட்டில் அடுக்களையில்லாத வீடு கிடையாது. ஒவ்வொரு அடுக்களையும் ஒரு விஞ்ஞான நிலயம். அதில் வேலைசெய்யும்—அல்லது வேலையை மேற்பார்க்கும்—பெண்களெல்லாரும் விஞ்ஞானிகள் என்று சொன்னால் ஒப்புக்கொள்வீர்களா? மாட்டீர்களா?

அடுப்பின் அமைப்பில் எவ்வளவு விஞ்ஞான அறிவு பயன்பட்டிருக்கிறது தெரியுமா? மூக்கட்டிகளை வைக்காமல் அடுப்புக்குச் சுவர் வைப்பது ஏன்? அடுப்பைக் களிமண்ணால் அமைப்பது ஏன்? அதற்குக் கொம்மை வைப்பது ஏன்? அடுப்பின் பக்கத்திற் கொடியடுப்புப் போடுவதின் தத்துவம் என்ன? அடுப்பில் விறகை வைக்கும்பொழுது அதற்கு அடியிற் சிறு கல்லையோ அல்லது செங்கற்றுண்டையோ வைத்துக் கொள்ளி முனையை உயர்த்துவது ஏன்?

இனிச் சமையல் விஷயங்களைச் சற்றே பார்ப்போம், எரியும் அடுப்பில் வெண்கலப் பானையை ஏற்றும் போது அதற்குள் தண்ணீர் விடாமல், அது காய்ந்தபிறகு அதில் தண்ணீர் விடுவது ஏன்? இப் பானையை அடுப்பில் வைக்கும் பொழுது அதற்குள்ள தண்ணீர் விடாமல் வைப்பதில்லையே! அது ஏன்? குழம்பு பருப்பை வேகவைக்கும் பொழுது உப்புப் போடாமல், அது வெந்த பிறகே உப்புப் போடுவது ஏன்? அடுப்பில்வைத்த விறகு கொழுந்துவிட்டெரியாமல், புகைந்து நேரே எரியவில்லையானால், ஊது குழலை வாயில் வைத்து அடுப்பு ஊதுவது ஏன்? குடிக்கும் தண்ணீரை மண்பானையில், இருண்டமூலையில், மணலின்மேல் வைப்பது ஏன்? அந்தப் பானையின்மேல் ஈரத்துணியைப் போர்த்துவது ஏன்? ஈயம் பூசாத பித்தளைப் பாத்திரத்தில் குழம்பு, ரஸம், மோர் போன்றவைகளை ஊற்றி வைப்பதில்லையே! ஏன்? பாத்திரங்களைத் தேய்க்கப் புளியையும், அதன்பின்பு சாம்பலையும் உபயோகிப்பது ஏன்? பாலுக்கு உறை குத்த மோரை உபயோகிப்பது ஏன்? காய்ச்சிய பால் நல்ல சூடாயிருக்கும் பொழுதும் உறை குத்தாமல் ஆறிக் குளிர்ந்து சிலவிட்டுப் போனபிறகும் உறை குத்தாமல் வெதுவெதுவென்ற சூடாயிருக்கும் போது உறை குத்துவது ஏன்?

இப்படிக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விஞ்ஞானத்துவம் அடங்கிக் கிடக்கிறது. பௌதிகசாஸ்திர தத்துவங்களும் இரசாயன சாஸ்திர தத்துவங்களும், உயிர்நூல் தத்துவங்களும் நம்முடைய வீட்டு அடுக்களையில் எவ்வளவு பயன்பட்டிருக்கின்றன!

நாம் தக்கவாறு விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தினால், மின்சாரத்தைத் துணையாகக்கொண்டு அடுப்புகளை உபயோகிக்கலாம்; இவற்றை உபயோகித்தால் புகை கரித்து, கண்ணிலும் மூக்கிலும் நீர் பெருக, வாயால் ஊதிக் குனிந்து ஊதி, அடுப்புப் பற்றவைக்கும் சிரமம் இராது. கைநோவு, இடுப்புக் கடுப்பு, முகம் வியர்க்க, மெய்யெல்லாம் சாம்பல் படிய, அடுப்பைச் சுத்தம் செய்யுங் கஷ்டமும் இராது. சமையலறையிலே புகையும் கரியும் தூசியும் ஒட்டடையும் ஆரா, மேலும் வெகு சக்கிரம் ஆகிவிடும். சமையல்வேலை உல்லாச வேலையாகக்கூட ஆகிவிடும். ஆனால் செலவு அதிகமாகத்தான் ஆகும்.

இவ்வாறு நமது தினசரி வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாயும், நமது அங்கங்களையும் இல்லைப்புகுந்துவிட்டதாயும் உள்ள விஞ்ஞானம் ஒவ்வொரு விஷயத்திலும் 'உயர்ந்தவர்க்கு உரிய உத்தமமை ஒப்ப' ஓங்கி வளர்ந்து உலகத்திலுள்ள ஒவ்வொரு துறையிலும் புகுந்து வியாபித்திருக்கிறது. ஆயினும், சிலர் 'விஞ்ஞானம் தீமை விளைப்பது, அது முற்றிலும் தீது; அது முன்னேறுவது அபாயமேயன்று, நன்மை பயப்பதல்ல; அதன் வளர்ச்சி என்றென்றும் தீமையையே விளைவித்துக் கொண்டிருக்கும்' என்று குறைகூறுகின்றனர். உண்மையில் விஞ்ஞானம் நன்றோ? தீதோ?

வலிமிக்க பஸ்மாசுரன் தவஞ் செய்தான். தெய்வம் பணிந்தது. 'நீ கேட்ட வரத்தை அளிப்பேன்' என்றது. 'யாருடைய தலையில் நான் கையை வைத்தாலும் அவர் உடனே நீறாய்ப் போகவேண்டும்' என்று அவன் வரங் கேட்டான், தெய்வமும் அவ்வரத்தை அருளிற்று. 'உன் தலையிலேயே கையை வைத்துச் சோதிக்கிறேன்' என்று பஸ்மாசுரன் கருதித் தனக்கு வரமளித்த தெய்வத்தையே துரத்த ஆரம்பித்தான். இறுதியில் தானே தன் தலையிலே கையை வைத்துக்கொண்டு அவன் மடிந்தான்.

இராவணன் கும்பகருணன் விபீஷணன் ஆகிய மூவரும் நற்குலத்திலே தோன்றியவர்கள், கற்றுணர்ந்தவர்கள், மூவரும் தவஞ் செய்தார்கள், மனிதரை இகழ்ந்த இராவணன் தான் கேட்ட வரம் பெற்றான். தேவர்களைப் பூண்டோடு அழிக்க விரும்பிய கும்பகருணன் தன்னுடைய லக்ஷியம் தவறி நித்திரையைப்பெற்றான். அவர்கள் இருவரும் சிலகாலம் சிறந்து வாழ்ந்தார்கள். இறுதியில் அழிந்துபோனார்கள். தெய்வபக்தி ஒன்றையே நாடித் தவஞ்செய்த விபீஷணனோ அரசு பெற்றான், சாகாமையும் பெற்றான்.

பஸ்மாசுரன் இராவணன் கும்பகருணன் போன்றவர்களைக் கொண்டு தவத்தைக் குறை கூறுபவர் யாருமில்லை. அவர்கள் தீயவழிச் சென்றது தவத்தின் குறையன்று; அவர்களுடைய மனநிலையின் குறையேயாகும்.

வலாமை நல்லீதல் நீதுபன் பில்லார்க்குச்
சாலாமை நன்றாநூல் சாயினும்—சாலாமை
நன்று தவநனி செய்தல் தீதென்பாரை
இன்றுளா ரியாங்கண் டிலம்.

(சிறுபஞ்ச மூலம் 61)

தவத்தைப் போன்றதே விஞ்ஞானமும். தவத்தைப்போல் விஞ்ஞானமும் ஆற்றல் அளிப்பது; வாழ்க்கையை மேன்மைப் படுத்துவது. நம்முடைய மனநிலைக்கு ஏற்ப அதை நன்மைக்கோ தீமைக்கோ நாம் பயன்படுத்தலாம். நம்முடைய மனத்தை நாம் பண்படுத்திச் சீரிய மனநிலையை அடைவோமானால், இவ்வுலகத்தை நரகத்துக்கு ஈடாக்கும் வறுமையையும் பிணியையும் விஞ்ஞானத்தால் நமக்குக் கிடைக்கும் சக்தியைக் கொண்டு பெரும்பாலும் நீக்கிவிடலாம்.

விஞ்ஞான வளர்ச்சியோடொத்து மனிதர் தம்முடைய அறிவையும் குணங்களையும் சீர்திருத்திக் கொள்ளாமல், வல்லமை மிக்க சக்திகளையெல்லாம் தீயவழிகளிற் பயன்படுத்தி, ஒருவரையொருவர் அழிப்பதிலேயே கருத்தாயிருந்தால், மிகவும் இனிமையாகவும் அழகாகவும் நடைபெறவேண்டிய வாழ்க்கையின் நிலை மிகவும் பரிதாபகரமாகிவிடும். மகோன்னதமாய்ச் சிறப்புற்று விளங்கிய பழங்கால நாகரிகங்கள் பல அழிந்துபோனதைப் போலவே, நமது நாகரிகமும் கரிந்து பாழாய்ப் போய்விடும்.

ஆதலால் வாழ்க்கையை விஞ்ஞானத்தாற் பண்படுத்தவேண்டும். கேவலம் மிருகங்களைப்போல உயிர் வாழ்வது வாழ்க்கையாகாது. உயர்ந்த லக்ஷியங்களை உடையதாய்ச் சிறந்த உணர்ச்சிகளை உடையதாய்த் துன்பங்கள் குறைந்ததாய் இன்பங்கள் மிகுந்ததாய் உள்ள வாழ்க்கையே வாழ்க்கை என்று கூறத்தகுவது.

தவளையை அறுப்பதையும் பூதக் கண்ணாடி கொண்டு பூச்சிகளை ஆராய்வதையும், அக்கராறும் வீசும் சோதனைச் சாலையில் திராவகங்களைக் கொண்டு பலவகையான சோதனைகளை நிகழ்த்துவதையுமே விஞ்ஞானம் என்று பலர் நினைத்து வருவது முற்றிலும் தவறு. விஞ்ஞானமென்பது ஆராய்ந்து வகுத்து ஒழுங்கு படுத்திய அறிவு. அற்பமாகத் தொடங்கிய இது ஆய்ந்தோறும் செழித்து நன்றாகப் பிணைபல பல கிளைகளாகப் பிரிந்துவிட்டது. ஒவ்வொரு தனி விஷயத்தைப்பற்றிய அறிவும் ஒரு விஞ்ஞானமாக வளர்ச்சியடைந்துவிட்டது.

விஞ்ஞானம் என்றால் ஒழுங்கு படுத்திய அறிவு என்ற சொல்லியதிலிருந்து விஞ்ஞான முறையில் அறியப்படும் ஒன்றுதான் அறிவு என்று நினைக்கலாகாது. எந்த விஞ்ஞானியும் இப்படி நினைப்பதில்லை. மலையையும் ஆற்றையும் மேகங்களையும் பசும்புல்லையும் நாம் காண்கிறோம்; அவற்றை அறிகிறோம். ஆனால் எப்பொழுதுமே இவ்வறிவு பூதத்துவ சாஸ்திரமாயேனும், தாவரசாஸ்திரமாயேனும், இரசாயன சாஸ்திரமாயேனும் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. தாயைப்பற்றிய அறிவு, குழந்தையைப்பற்றிய அறிவு முதலியன உயிர்த் தத்துவ சாஸ்திரத்தை ஒட்டியதாகவே இருக்கவேண்டும் என்பதில்லை. ஆராய்ச்சியிற் போலவே சிந்தனையினாலும் அறிவு கிட்டுவதுண்டு என்பதற்கு ஒவ்வொரு நாட்டிலுமுள்ள இருடிகளும் தீர்க்கதரிசிகளும் சான்றுகளாக இருந்து வருகிறார்கள்.*

விஞ்ஞானங்களைப் பௌதிகசாஸ்திரங்கள் என்றும் மானுஷிக சாஸ்திரங்கள் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம், இரசாயனம், எந்திரசாஸ்திரம் போன்றவை பௌதிகசாஸ்திரங்கள். இவை பொதுவாகப் பொருள்களின் தன்மைகளையும் அவற்றை வசப்படுத்தி ஆண்டு பயன்படுத்தும் முறைகளையும் அறியமுயலுபவை, சமூகநூல், உளநூல், உயிர்நூல், வைத்தியநூல் முதலியவை மானுஷிக சாஸ்திரங்கள் என்று கூறத்தக்கவை; இவை வாழ்க்கைத் தத்துவங்களையும் நிகழ்ச்சிகளையும் அறிய முயலுபவை. சென்றுகாலத்துக்கு முன்வரை பௌதிகசாஸ்திரங்களின் வளர்ச்சியே பிரதானமென்று அறிஞர்பலரும் கூறிவந்தார்கள். அவ்வளர்ச்சியால் நூற்றுக்கணக்கான புதுப்பொருள்கள் கிடைத்துவருவதையும், போக்குவரவு சாதனங்களும் பிற சௌகரியங்களும் மிக நன்றாய் அமைந்துவருவதையும் கண்டு அவ்விஞ்ஞான சாஸ்திரங்களை அவர்கள் மிகவும் போற்றிவந்தார்கள்! ஆனால் இப்போது இந்த மனநிலை சற்று மாறியிருக்கிறது, ஏனெனில், பௌதிகசாஸ்திரங்களின் வளர்ச்சி காரணமாக நம்முடைய சமூகவாழ்க்கை அடியோடு மாறிவிட்டது; நாம் வெகுகாலமாகப் பின்பற்றி வந்த கொள்கைகளும் நாம் கொண்டிருந்த அபிப்பிராயங்களும் மிகப் பெரிய சந்தேகங்களுக்கு உள்ளாகி விட்டன. நம்முடைய லக்ஷியங்கள் கூடப் புரண்டுவிட்டன, ஆயினும் இவ்வளர்ச்சியானது இன்றுவரை நமது சமூகவாழ்க்கையைச் சீர்பெற அமைக்க உதவவில்லை; உறுதியான புதியகொள்கைகளை நமக்கு அளிக்கவில்லை; சீரிய லக்ஷியங்கள் இன்னும் நமக்குத் தோற்றுவிக்கவில்லை.

தொடர்ச்சி 6ம் பக்கம்

* இதை ஜே. ஏ, தொம்ஸன் (J. A. Thomson) என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:

It must be understood, that there are other kinds of knowing, besides scientific knowing. We know the country-side we love, not only by studying its Geology and Meteorology, its Botany and Zoology, but by appreciating its beauty. It is not a scientific knowledge that we have of our mother or our friend. Scientific knowledge is gained by observation and experiment and by reflection on the merits of these. But it would be very high-handed to maintain that the philosophers and sages have gained no knowledge by pondering over the possible meaning of the world and man's place in it.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் அன்புக்கு அணியர்

(குகதாசர் சு. சபாரத்தின முதலியார் எழுதிய கட்டுரை)

### அன்பே கடவுளுடைய சொரூபமாகும்

"அன்பு சிவமிரண்டென்ப
ரறிவிலார்
அன்பே சிவமாவ
தாருமறிகிலர்"

என்று இவ்வுண்மையை ஆன்றோர் எடுத்து விளக்கிப் போந்தனர். கடவுளுடைய சொரூபமாகிய அன்பு ஒருவனிடத்து விளங்கும்போது, கடவுள் அவனிடத்து மிக அணிமைக்கண் உள்ளாரென்பது சொல்லாமலே அமையும். கடவுள் அன்பாளரிடத்தே அணிமைக்கண் விளங்குவரென்பதனால், ஏனையோரிடத்து அவர் சேய்மைக்கண் விளங்குபவரென்றோ, அவருடைய வியாபகமில்லாத இடங்களுஞ் சிலவுள என்பது பெறப்படுமாலோவெனின், அற்றன்று. இங்கே அணிமை சேய்மையென்று எடுத்துக் காட்டப்படுவன வெல்லாம் அவருடைய விளக்கம்பற்றியவன்றி வியாபகம்பற்றியனவன்று. அவர் எங்கும் வியாபியாயிருந்தாலும், அன்பாளரிடத்து மட்டுமே தயிரில் வெண்ணெய்போல வெளிப்பட்டு விளங்குவர், ஏனையிடங்களில் பாலில் நெய்போல வெளிப்படாது விளங்குவர்.

அன்பாவது கைம்மாறு சிறிதுங் கருதுவதின்றி யாதொரு பொருளின்கண் கசிவுற்று அமைந்திடும் உள்ளத்துணர்ச்சியாம். இந்த உணர்ச்சி யாதொரு பொருளிடத்துண்டோ, அந்தப் பொருளின் உளத்தின்கண்ணே அந்த உணர்ச்சிக்கு விடயமாகிய பொருள் உறைப்புற்று அமைந்திடுமென்பது நாமெல்லாம் அனுபவத்திற்கண்ட உண்மையாகும். ஆகவே, கடவுளிடத்து அன்பு செய்வாரது உள்ளத்தின்கண்ணே, அவர் உறைப்புற்று அமைந்து விளங்குவரென்பதும், எனவே அவர் அவ்வுள்ளங்களின் கண்ணும் அணிமைக்கண் வெளிப்பட்டு விளங்குவரென்பதும் தட்டி மறுக்கப்படாததாம்.

நாம் கடவுளிடத்தே அன்பு செய்யுமிடத்துக் கடவுளும் நம்மிடத்து அன்பு செய்வர். இதுவே அன்னியோன்னிய சம்பந்தமெனப்படும். காந்தம் ஊசியைக் கவர்ந்து பற்றுமிடத்து, ஊசியும் காந்தத்தால் கவர்ந்து பற்றப்படும். ஊசியின்கண் காந்தத்தால் கவர்ந்து பற்றப்படும் குணம் இல்லையாயின், அது காந்தத்தால் கவர்ந்து பற்றப்படுவது கூடாது. காந்தத்தின் கவர்ச்சியினுக்கு யாதொரு பிரயோசனமும் உண்டாகமாட்டாது. அதன் கவர்ச்சி தானும் கவர்ச்சியெனச் சொல்லப்படுதற்கு உரியதாகமாட்டாது. இங்ஙனமே இருவர் ஒருவரையொருவர் அன்பு செய்யுமிடத்து, அவ்வன்பு இருவர்பாலும் உண்டாதல் வேண்டும். இங்ஙனமின்றி ஒருவர் மாத்திரமே அது செய்யப்படுமாயின் அது "ஒருதலைக்காமம்" என்று சொல்லப்படுவதுபோல ஒருபாலன்பாகமாத்திரமே முடியும். இவ்வன்பு உபயவன்பு எனப்படமாட்டாது. இருவருள் ஒருவரையொருவர் அன்பு செய்வதுண்டானால் மட்டுமே அவ்வன்பின் பூரணசுவை இருவர்பாலும் செறியும். நாம் அன்பு செய்யுமிடத்துக் கடவுள் எம்மை அன்பு செய்யாராயின் அவர் வன்கண்ணரெனப்பட்டுக் கடவுள் இலக்கணத்தின் பிறழ்ந்து விடுவோருமாவர். ஆகவே கடவுள் தம்மிடத்து அன்பு செய்வாரையெல்லாம் தாமும் அன்பு செய்து அவர்களுக்கு மிக அணிமைக்கண் விளங்கி அவர்களுக்கு அவ்வன்பால் எய்தற்குரிய சுவையைப் பூரணமாக அளித்தருள்வர்.

கடவுள் தமக்கு அன்புசெய்வாரை மாத்திரமே தாமும் அன்பு செய்வாராயின், அவர்கள்பால் அவருக்கு விருப்பும் ஏனையோர்பால் அவருக்கு வெறுப்பும் உளதாமோவெனின், அற்றன்று. அவருடைய அன்பு எல்லாவுயிர்கள் மாட்டும் ஒப்பவே செறிந்து விளங்கும். அவ்வன்பு அவரை அன்பு செய்வாரிடத்து மாத்திரமே வெளிப்பட்டு விளங்குமாதலின், அவர் அவர்களை அன்பு செய்வார் என்று சொல்லப்படுவர். அவர் தம்மை அன்பு செய்ய வேண்டுவது அவருடைய அன்புக்குரியதோர் முக்கிய குணமாதலால், இந்த முக்கிய குணமின்மைபற்றி அவர் பிறர்பால் வன்புடையார் எனப்படுதல் பெறப்படமாட்டாது.

கடவுள் பேரருளாளராதலின் அவருடைய அன்பு விளக்கம் எல்லார்பாலும் செலுத்துதல் வேண்டுமன்றோவெனின், நாம் மேலே எடுத்துக்காட்டியபடி அவருடைய அன்பு எங்கும் ஒருபடித்தாகவே செறிந்து வியாபிக்கும். ஆனால் அதன் விளக்கம் அந்த அன்பின் சுவையை அனுபவத்தின் வைத்துக் காணவல்லார்பால் மாத்திரமே பிரகாசித்தற்குரியதாம். அந்த அன்பு பிரகாசியாமை, அதனை அனுபவத்தற்குரிய தகுதியில்லாத குறைவன்றி, அவ்வன்பின் குறைபாடாகாது.

கடவுளை அன்பு செய்யார்க்கு அவருடைய அன்பு விளக்கமாட்டாது. ஆகவே அவர்களிடத்தே அவ்வன்பின் விளக்கம் பெறப்படுதற்குரிய தகுதியில்லை. ஆகவே அவ்விடங்களில் அது விளக்கமாட்டாது. இதுகொண்டு அவ்வன்புக்காவலர்தாம் அழுக்குச் சிறிதும் இல்லையென்பது கருத்து.

இந்த அன்பே கடவுளுடைய திருவருள் எனப்படுவது. இந்தத் திருவருளே உலகத்திலுள்ள பொருள்களையெல்லாம் ஒன்றோடொன்று ஐக்கியமுறுத்தும் கருவியாகவுள்ளது. இந்த அன்பாகிய அருள் எங்கெங்கு வெளிப்பட்டுக் காணப்படுமோ அங்கங்கெல்லாம் கடவுள் அணிமைக்கண் விளங்குவரென்பது தேற்றமாமென்க.

---


## இந்துசாதனம்

பத்திரக் கிரயம்

ஒருவருடத்திற்கு

யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் ஆள் மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ் |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 6 50 | 6 50 | 10 50 |

இந்தியா இலங்கை தபால்மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ். |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 9 50 | 9 50 | 13 50 |


---

## தொண்டைமான் சக்கிரவர்த்திக்கு

### வடதிருமுல்லை வாயிலில் மாசிலாமணியீசுரர் அருள்புரிந்தது

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

சொல்லரும் புகழான் தொண்
டைமான் களிற்றைச்சூழ் கொடி
முல்லையாற் கட்டிட்டு
எல்லையிலின்ப மவன்பெற
வெளிப்பட்டருளிய விறைவனே
யென்று
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயி
னாதனே நரைவிடையேறீ
பல்கலைப் பொருளே படுதுயர்
களையாய் பாசுபதா பரஞ் சுடரே.

இத்தேவாரப் பாசுரம் வடதிருமுல்லைவாயிற் றேவாரப் பதிகத்துள் பத்தாம் திருப்பாடலாகும். இது சுந்தரர்பாடிய ஏழாந் திருமுறையைச் சேர்ந்தது. வடதிருமுல்லைவாயிலென்பது தொண்டைநாட்டு தேவாரம் பெற்ற 32 தலங்களுள் ஒன்று. இது ஆவடிக்கு அருகேயுள்ளது. செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்தது. மேற்குறித்த தேவாரத்தில் குறிப்பட்ட தொண்டைமான சரித்திரத்தை ஆராய்வாம்.

காஞ்சிமா நகரத்தில் அரசுபுரிந்த தொண்டைமான் சக்கரவர்த்தி தலயாத்திரைகாகச் சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு திருமுல்லைவாயிலையடைந்து அங்குள்ள முல்லைக்காட்டில் அவ்விரவைக் கழிக்கத் தங்கினர். அங்கே தங்கிய போது அருகாமையிலுள்ள புழற்கோட்டத்தில் வாணன் ஓணன் என்னும் இரு குறும்பர்கள் கொடுங்கோல் செலுத்திச் சனங்களைத் துன்புறுத்துவதாக அறிந்தான். அவர்கள் மேல் படையெடுத்துச் செல்லும் வழியில் தான் ஏறிச்சென்ற யானை முல்லைக் கொடிகளால் தகைப்புண்டு காலெடுக்கமாட்டாமலிருக்க, அதைக்கண்டு தனது வாளினால் யானையின் காலில் சிக்குண்ட கொடிகளை அறுத்து வெட்டினான். அவ்வெட்டு அக்கொடிகளின்கீழ் மறைப்புண்டிருந்த சிவலிங்கப் பெருமானின்மேற்பட்டு இரத்தம் பெருகிற்று. இதைக்கண்ட அரசன் பயந்து நடுநடுங்கி எம்பெருமானை வாழ்த்தி வணங்கினான். அவர் அவனுக்கு அருள்சுரந்து குறும்பர்களை வெல்வதற்குத் துணையாக நந்திதேவரை அனுப்பினார். நந்திப்பெருமான் துணைகொண்டு குறும்பர்களை வென்று அவர்கள் கோட்டையை அழித்து அக்கோட்டையிலிருந்த எருக்கந்தூண் முதலியவற்றைக் கொண்டு முல்லைக் காட்டில் கண்ட சிவலிங்கப் பெருமானுக்குத் திருக்கோயில் கட்டுவித்தான்.

### தவம்

தவந்தனின் மிக்க தொன்றிலை
தாவிலத்
தவந்தனை நேர்வது தானுமிலை
யாற்
றவந்தனினரிய தொன்றில்லை
சாற்றிற்
றவந்தனைக்கொப்பது தவமதா
குமே.

ஓரினை யொடுங்கு முன்னரும்
செலாத தொலைக்குந்
தன்மைய்
போயினோபிறு புராரிதன்
வாதத்தற்சென்று
தாரகாசனை யடைந்தனை
வதைத்திச் செம்பொன்
ஆடிமதாயுமா தவத்தினு
நிலையுண்டோ.

---

## கடிதம்

### வீண் வதந்திகளை நம்பாதீர்

### விலைக்கட்டுப்பாடும்வடமராட்சி புகையிலை வர்த்தகர் சங்கமும்

வடமராட்சிப் புகையிலை வர்த்தகர் சங்கம், வடமராட்சிப்பகுதியிலுள்ள புகையிலைச் செய்கையாளர்கள் மற்றும் புகையிலைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் யாவரும் அவதானிக்கவேண்டியது; இச்சங்கம் இதுவரை வடமராட்சிப் புகையிலைத் தொழிலை கஷ்டப்படுத்தக்கூடிய எவ்வித விஷயங்களையும் ஆதரிக்கவில்லை. எவ்வெவ்வகையில் வடமராட்சியின் ஜீவநாடியான இத்தொழிலைப் பாதுகாக்கவேண்டுமோ அவ்வகையிலே பின்நின்றதுமில்லை, இனி நிற்கப்போவதுமில்லை.

சென்றவருடம் ஏற்படுத்தப்பட்ட விலைக் கட்டுப்பாட்டை அனுட்டானத்திற் கொண்டுவராமல் தடுக்க இச்சங்கம் செய்த முயற்சிகளும் அதற் பெற்ற வெற்றியும் பிரசித்தமானவை.

இப்போதும் சென்றமாதம் யாழ்ப்பாணக் கச்சேரியில் புகையிலை விஷயமாக விலைக் கட்டுப்பாட்டதிகாரி கூட்டிய கூட்டத்தில் அவ்வதிகாரிக்கு, அங்கே சமுகமாயிருந்த எங்கள் சங்கத்தவர் விலைக்கட்டுப்பாடோ அல்லது ஐக்கியசங்கமூலம் புகையிலை வாங்கி விற்கும் முறையோ ஏற்படுத்தினால் வடமராட்சிப் பகுதிக்கு வரப்போகும் கஷ்டநஷ்டங்களை விளக்கிக்காட்டி வாதாடியிருக்கிறார்கள்.

எம் சங்கத்தின் போக்கு இவ்வாறிருக்க, யாரோசில சுயநலவாதிகள் எம் சங்கம் விலைக்கட்டுப்பாட்டையோ அல்லது ஐக்கியசங்கமூலம் புகையிலை வாங்கி விற்பதையோ ஆதரிப்பதாக வீண் கதை பரப்பி வருவதையறிந்து வருந்துகிறோம்.

எனவே வடமராட்சிப் புகையிலையுடன் சம்பந்தமுள்ள எவரும் இச்சங்கத்தின் நற்பெயரைக் கெடுக்க எண்ணும் சுயநலவாதிகளின் வீண் கட்டுக்கதைப் பிரசாரங்களை நம்பவேண்டாமென இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

இங்ஙனம்

மேற்படி சங்கத்தின் சார்பாக

க. சி. க. வைத்தியலிங்கம்பிள்ளை

சு. வெ. முருகுப்பிள்ளை

---

பாரதிடுகின்றமைந்தன் பன்
மணித் தொட்டிலின் றுஞ்
சீர்தரெழுந்தண்டம் வாய்ந்து
செங்கதிர்ச் செல்வம்பற்றிக்
கார்த்திடு புயங்கள் கவ்வும் படித்
தெனக் காத்திரகொண்டு
பார்த்து மோரிறையில வந்தான்
தவத்தினும் பெரிதொன் றுண்டோ.
சேட்டனுமதனைச் சிற்றங்கிளர்ந்
திட நகைத்து மாதன்
தாட்டுன யுனனித் தொன்றுட்
சதமகன் வேண்டவாழி
மாட்டுறச் செளிததகைய மல
ரயன பதத்தினைகாணும்
நீட்டினன் தவமேயன்றி நெடும்
பொருள் பிறவுமுண்டோ.
பூத்திடுகலைச் செவ்வேளாயிரத்
திரட்டி கொடை
கூர்த்திடு பகழி தாணடிக குன்றங்
கள் செறவெவ்வேயான்
கார்த்தட மொய்மபூமறை
தனையினை தாளுழுன்னர்ப்
பேர்த்தும் வசைதழுந்த வம்பாத
வதனினும் பெரிதொன் றுண்டோ.

தவத்தின சிறப்பை நாயனர்
'தவமுந் தவமுடையார்க்காகு
மவமதனை
அஃதிலார் மேற்கொள்வது'
என்னுந் திருக்குறளால் கூறு
கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

தற்கிடையில் என்னை யறியாமல் என் கண்களிலிருந்து நீர் சிந்தியது, என் மனம் கரைந்தது; இப்படியும் ஒருவர் உலகத்திலே செய்வாருண்டோ என்றெண்ணினேன்; "அக்கா, நேற்று வந்த எனக்கு இவ்வளவு உபசாரமா? அந்நியளாகிய என்மேல் இவ்வளவு அன்பா? இவைகளுக்கெல்லாம், என் அருமையான அக்கா, என்னால் என்ன பதில் செய்யமுடியும் என்று சொல்லிக் கலங்கினேன்: என் கண்ணீரைத் துடைத்து "தங்காய், நான் உம்மை நேற்று வந்தவளென்றெண்ணவுமில்லை; அந்நியளென்று மதிக்கவுமில்லை; என்னுடன்பிறந்த தங்கையென்றே எண்ணிக்கொண்டேன்; நீர் கவலைப்படவேண்டாம்; மேலும், என் ஞாபகார்த்தமாக இந்த மோதிரத்தை யிட்டுக்கொள்ளும்" என்று தன் கைவிரலிலிருந்த ஒரு நீலக்கல்லிழைத்த மோதிரத்தை என் கைவிரலில் தானாக இட்டாள்; "அக்கா, நீங்கள் செய்யத்தக்கதையெல்லாஞ் செய்யுங்கள்; நீங்கள் தா இருக்கிறீர்கள்; நான் ஏழை இருக்கிறேன் என்று சொல்லுதற்கிடையில், "என் அருமைத் தங்காய் என்னுயிரையும் உமக்கு ஏதும் ஆபத்து வந்தால் விடச் சித்தமாயிருக்கிறேன்; அந்தப் பராசக்தி உமக்கு எவ்வகையான ஆபத்தும் வரவிடமாட்டாள்" என்று திடமாகச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, அன்றுபகல் வந்த சாரதியே தன் ரதத்தை அதிக சத்தமில்லாமல் மெல்ல அங்குக்கொண்டு வந்து நிறுத்தினான். அவன் தானாகவே வந்து பிரயாணப் பெட்டியையும் ஏனைய பண்டங்களையும் இரதத்தில் ஏற்றினான்; அஞ்சுகத்தம்மாள் மேசையிலுள்ள மணியை ஒலித்தமாத்திரத்தே அந்தச் சுபம பாகப்பிராமணர் அங்கே வந்தார்; "ஐயா, தங்கச்சியை அழைத்துக் கொண்டுபோய்ப் பயணமனுப்பிவிட்டுச் சற்று நேரத்தில் வந்துவிடுவேன்; பாதுகாப்பாய் இங்கே இரும்" என்று சொல்லுதலும் "அப்படியே செய்கிறேன் அம்மா" என்றார் ஐயர்.

### "போய்வருகிறேன்"

போய்வருகிறேன் சாமி; இவ்வளவு காலமும் பெற்ற தகப்பனைப்போல் மதித்து நீங்கள் என்னை அன்பாகப் போஷித்து ஆதரித்த நன்றியை மறக்கமாட்டேன் என்று சொல்லி ஐயரை நமஸ்காரஞ் செய்ய, அப்படியொன்றும் நான் செய்யவில்லை மகளே; என் கடமையைத்தான் செய்தேன்; சமையல்வேலை செய்யும் ஏழைப் பிராமணன் என்னால் என்ன முடியும். சுகமே போய் வாரும்; அந்த ஆண்டவன் உம்மைக் காப்பான்; இவ்வளவு சீக்கிரத்தில் எங்களைவிட்டுப் பிரிந்து போவீரென்றறியேன்; ஆண்டவன் கிருபையாலாகச் சுகமே போயவாரும்; நீர் விட்டுப் போவதை நினைக்க எனக்கு அழுகை வருகிறது; ஆனாலும் பயணம புறப்படும்போது அழவொண்ணாதென்று சொல்லுவார்கள்; எங்களை மறந்துவிடவொண்ணாதம்மா" என்று கண்களில் நீர்ததும்பச் செசவிப் பிரதி நமஸ்காரஞ் செய்து விடைதந்தார். இதற்கிடையில அஞ்சுகத்தக்காள உறங்குகின்ற பத்மாவையும் எழுப்பி இரதத்தைச் சேர்வை மாற்றி எங்களுடன் புறப்படச் செய்தாள; மூவரும் புறப்பட்டோம்; எங்கள அறைக் கதவுகளையும தலைவாசற் கதவையும அக்காள் தானே பூட்டித் திறவுகோலைத் தன்னுடன் வைத்துக்கொண்டாள; மூவரும் இரதத்தில் வந்து ஏறினோம்; இரதம் புறப்பட்டது; "தங்காய்; என்னுடைய விலாசம் உமக்குத் தெரியும்; என்பதிலை எதிர்பாராமல் நீர் யாத்திரை செய்யும் ஒவ்வொரு தலத்திலுமிருந்து எனக்குக் கடிதமெழுத வேண்டும்" என்று சொல்லி முத்திரையிட்ட காகித உறையில தன்னுடைய விலாசம் எழுதப்பட்டபடி சில உறைகளையும் வெற்றுக் கடதாசிகளையும் என்னிடம் தந்தாள் வாங்கி வைத்துக் கொண்டேன்; இதற்கிடையில் எங்கள் ரதம் புகையிரதஸ்தானத்தை யடைந்தது; முதல் வகுப்பிற் பிரயாணஞ் செய்தற்காகிய பெண்கள் தங்கியிருக்கிறதாகிய அறையுள் மூவரும் இரதத்தைவிட்டு இறங்கிப்போய் இருந்தோம். "தங்காய்; எந்தத் தலத்திற்கு முதற்போக வுத்தேசித்திருக்கிறீர்" என்று கேட்க, சிதம்பரம் போகலாமென்று உத்தேசிக்கிறேன் எனச் சொன்னேன்; உடனே சாரதியைக் கூப்பிட்டுச் சிதம்பரத்திற்கு முதல் வகுப்புப் பிரயாணச் சீட்டு எடுத்து வா என்று சொல்லிப் பணத்தைக் கொடுக்க, சாரதி வாங்கிக்கொண்டு போனான்; "தங்காய், இதற்றுட் கொஞ்சப்பணமிருக்கிறது; வழிச் செலவுக்குதவும்" என்று சொல்லி ஒரு பணப்பையை நீட்ட, நான் இரண்டுகையினாலும் வாங்கிக்கொண்டேன்; சாரதி பிரயாணச்சீட்டு எடுத்துக்கொண்டு வந்து தர, புகையிரதம் வரும் சத்தமுங் கேட்டது; என் நெஞ்சு திடுக்கிட்டது; மனத்தில் ஏக்கம் பிறந்தது பிரிவையிட்ட கவலை அதிகப்பட்டது; இதற்கிடையில ஒரு கூலிக்காரன் வந்து பெட்டியையும் ஏனைய பண்டங்களையும் எடுத்துக்கொண்டு முந்திப் போனான்; அக்காள் முன்செல்ல, நான் நடுவிற் செல்ல, பத்மா எங்களைத் தொடர்ந்து வந்தாள்; பெண்களுக்கெனப் பிரத்தியேகமாகவுள்ள ஒரு வண்டியுள் என்னையும் பத்மாவையும் ஏறச்செய்து அக்காள் தானும் ஏறினாள்; அந்த நேரத்தில் அந்த வண்டியுள் வேறெவருமில்லை; என்னை நடுவில் இருக்கச்செய்து ஒருபுறம் பத்மாவும் ஒருபுறம் தானும் இருந்துகொண்டு "தங்காய், ஒன்றுக்குங் கலங்கவேண்டாம்; அந்தப் பராசக்தி உம்முடன் எந்த நேரமும் உடன் வருகிறாளென்று எண்ணிக்கொள்ளும்; எந்தத் தலத்திற்குப் போனாலும், இவளொருத்தி இருக்கிறாள; இவளும் நல்ல கதியடைய வேணடுமென்று என்னைப்பிட்டுத் தெய்வத்தைக் கும்பிடும்; அதனோடு நான் தெரிந்தோ தெரியாமலோ ஏதுங் குற்றஞ்செய்திருந்தால் அதை மனசினில் வைக்காமல் மறந்துவிடும்" என்று சொல்லி நமஸ்காரஞ் செய்தாள்; ஐயோ, கடைசியிற் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்க என் மனங் குழைந்தது; ஐயோ! அக்கா, பெற்றதாயைக் காட்டிலும் பரிவுடைய அக்கா, இப்படியேன் சொல்லுகிறீர்கள் என்று, சிறுபிள்ளைபோல் அக்காளை என் கைகளால் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதேன்; அவள் என் கண்ணீரைத் துடைத்து "அழவேண்டாம அம்மா, அன்புமேலீட்டினால உபசாரமாகச் சொன்னேன்" என்று சமாதானஞ் சொல்லித் தேற்றினாள்; அக்கா, புகைரதம புறப்பட இன்னமும நேரமிருக்கிறதா, இந்த வண்டியிலே வேறெவரையுங் காணேனே என்று பயத்துடன் கேட்க, அக்காள சிரித்து "தங்காய, முதல வகுப்புப் பெட்டியிலிருக்கும்போது என்ன பயம்; இந்த ஸ்தானத்தில் புகைரதம ½ மணி நேரம தங்கினபின்புதான புறப்படும; பராசக்தி உம்முடன் [illegible] விடாதீர்" என்று சொல்லுவதற்கிடையில் "அம்மா, இந்தப்பெட்டி வசதியாக விருக்கிறது; இதில் ஏறுங்களென்று ஒரு பிராமணப் பிரபு தமது தபாரை அப்பெட்டியில் ஏறச் செய்தார். அம்மா, சங்கரையன் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் இருக்கிறான்; ஒவ்வொரு தானத்திலும் புகைரதம் நிற்கும்போது உங்களை வந்து பார்ப்பான் சுகமே போய்வாருங்கள்; எதற்குங் கடிதம் எழுதுங்கள்" என்று சொல்லிவிட்டு மேடையில் நின்றார் அந்த ஐயர். கிழவி எங்கள் ஆசனத்திற்கு எதிராசனத்தி லிருந்துகொண்டு "நீங்கள் எங்கேபோகிறீர்கள்" என்று எங்களைக் கேட்க "இந்தத் தங்கைச்சிதான் யாத்திரை செய்தற்குப் புறப்பட்டிருக்கிறது; நாங்கள் வழியனுப்பவந்தோம்" என்று அக்காள் மறுமொழி சொன்னாள்; "அம்மா, நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று நான் கேட்க, நானும யாத்திரை செய்யும் நோக்கமாகப் போகிறேன்; முதன்முதற் சிதம்பரத்திலே போயிறங்க எண்ணியிருக்கிறேன்" என்று பாட்டி பதிலசொல்ல நான் சந்தோஷப்பட்டேன்; "அம்மா, என் தங்கைச்சியும சிதம்பரத்திலேதான் போயிறங்குவாள்; இவளைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்ல கிழவி "ஆம, மகளே, அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிச் சந்தோஷப்பட்டாள்; புகைரதம புறப்படும் நேரமாயவிட்டது; அப்பொழுதான அக்காள மனங்கலங்கினாள், என் முகத்தைத் தடவி முத்தமிட்டாள்; பத்மாவோடு வண்டியிலிருந்து இறங்கினாள்; புகைரதம புறப்பட்டது, அக்காளை நமஸ்காரம பண்ணினேன்; பிரதி நமஸ்காரம் பண்ணினாள; என் கண்ணை விட்டகன்றாள. ஆனாலு இன்னமும என் மனதைவிட்டு அஞ்சுகத்தக்காள் அகன்றிலள்.

(வரும்)

## அகில இலங்கைத் தமிழர் மகாநாடு

இம்மகாநாடு யாழ்ப்பாண நகர மண்டபத்தில் வருகிற சனிக்கிழமை பிற்பகல் 3½ மணி தொடக்கம் 8½ மணிவரையில் நடைபெறுமெனவும், தமிழ் மக்களும் ஏனைய அபிமானிகளும் தவறாது சமுகஞ் செய்தல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## விவாகம்

**கார்த்திகேசஐயர்— கௌரியம்மாள்**

நிகழும் கார்த்திகைமாசம் உகூ திங்கட்கிழமை யிரவு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், கோப்பாய் பிரமஸ்ரீ வைரவநாதக் குருக்களின் பேரனும் பிரமஸ்ரீ முத்துக்குருக்களின் கனிஷ்டபுத்திரனுமாகிய பிரமஸ்ரீ கார்த்திகேய ஐயருக்கும், வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடி, பிரமஸ்ரீ பி. பாலசுப்பிரமணியக் குருக்களின் புத்திரி திருவளர் செல்வி கௌரியம்மாளுக்கும் மணமகளில்லத்தில விவாகம் விதிப்படி சிறப்புற நிறைவெய்தியது.

தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம இறைவன திருவருள் புரிவாராக.

## நன்கொடை

மேற்படி விவாகக் கிரியையில் இந்துசாதனத்திற்கு நன்கொடையாக வரித்தனுப்பிய ரூபா 2 பெற்றும். மனேஜர்.

## ஸோல்பெரிப் பிரபுவை நம்பமுடியாதாம்

கொழும்பு டிச 12—

கொழும்பு முனிசிபல் தொழிலாளர் யூனியனின் கூட்டமொன்று நகரமண்டபத்தில் நடைபெற்றபொழுது, டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்க பின்வருமாறு பேசினர்.

"இங்கிலாந்தின் ஏகதேசாதிகார தீவிரவாதிகளில் ஸோல்பரி பிரபுவும் ஒருவர். ரஷ்யர் வெள்ளை நிறத்தவரல்ல என்ற காரணத்துக்காக சோவியத் மக்களுடன் உறவு வைத்துக்கொள்ளுவதை சேம்பர்லேன் காலத்தில் ஸோல்பரி பிரபு கடுமையாக எதிர்த்தவர். அப்படிப்பட்டவர் வெள்ளைநிறத்தவர்களல்லாத இலங்கையரின் அரசியலைத் தயாரிப்பதில் நாம நம்பிக்கை வைக்கமுடியாது.

முனிசிபல் தொழிலாளர்களின் பஞ்சப்படியைக் குறைத்து ரூ. 35 ஆகவேனும் அதிகரிக்கவேண்டுமென்றும் முனிசிப்பல் சிப்பந்திகளின் குறைகளைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டுமென்றும் அந்தக் கமிட்டியில் யூனியன பிரதிநிதியொருவர் இருக்கவேண்டுமென்றும் கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஸோல்பரிக் கமிஷனுக்கு வேண்டிய ஏற்பாடுகள்

அரசாங்கசபைக்கூட்டத்தில் ஸோல்பரிக் கமிஷனுக்குக் காரியாலயம் ஏற்படுத்தப்படுமென அறியப்படுகிறது, பிரஸ்தாபக் கமிஷன கிறிஸ்மஸுக்கு முன் இலங்கைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

டொனமூர் கமிஷன் போல் ஸோல்பரி கமிஷனும அரசாங்க சபைச் சட்டிடத்தில தனது விசாரணையை நடத்தும். சோல்பரிக் கமிஷனைச் சேர்ந்தவர்கள் கால் பேஸ் ஹொட்டலில் ஆசினால ஒதுக்கப்பட்டிருக்கும் அறைகளில் தங்குவார்களாம.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இக்கல்லூரியில் வருடாந்தப் பரீட்சை நடந்தபின் தைப்பொங்கல் விடுமுறை நாளைத்தினம் (15-12-44) ஆரம்பமாகிறது.

## நாவலர் தினம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களது திருநாள் அளவெட்டி சதானந்த வித்தியாசாலை மண்டபத்தில மேற்படி வித்தியாசாலை மாணவர் சங்க ஆதரவிற் கொண்டாடப்பட்டது. மேற்படி வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. அ. பொன்னுத்துரையவர்கள் தமது தலைமையுரையில் நாவலரவர்களது தினம் ஏன் கொண்டாடப்படவேண்டுமென்பதையும் அப்பெரியார் சைவத்திற்குந் தமிழிற்குஞ் செய்த தொண்டுகள் எவையெவை யென்பதையும் விரிவாக எடுத்துப் பேசினர். பின்னர் மேற்படி வித்தியாசாலையாசிரியர் பண்டிதர் க. நாகலிங்கமவர்கள் 'நாவலர் பெருமான்' என்னும் பொருள்பற்றி உணர்ச்சி ததும்பியதொரு விரிவுரை நிகழ்த்தினர். அவ்விரிவுரையில நாவலர் பெருமான தமிழுக்குஞ் சைவத்துக்கும செய்துவைத்த தொண்டுகளையும் அன்னாரின் ஈசுவரபக்தி, பரோபகாரம், தியாகம் முதலாய அரும பெரும பண்புகளையும் அன்னாரது வரலாற்றையும பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினர். இறுதியில சபையோர் குறிப்புரையோடும தலைவர் பின்னுரையோடும் கூட்டம் நிறைவெய்தியது.

—அடி. க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

